## சமத்துவ நாளான இன்று

# சென்னை தெற்கில் உறுதிமொழி ஏற்று சூளுரைப்போம் வாரீர்!

## கழகத்தினருக்கு அமைச்சர் மா.சுப்பிரமணியன் வேண்டுகோள்!

சென்னை, ஏப். 14-

சென்னை தெற்கு மாவட்டக் கழகத்தினருக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் மா.சுப்பிரமணியன் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

தந்தை பெரியாரையும், அண்ணல் அம்பேத்கரையும் இரண்டு கண்களாக பாவித்து, செப்.17 தந்தை பெரியார் பிறந்த நாளை சமூக நீதி நாளாக அறிவித்து அரசின் சார்பில் அரசு அலுவலகங்களில் சமூக நீதி நாள் உறுதிமொழி ஏற்க செய்து 'சமூக நீதியின் சமத்துவ பாதுகாவலராக' விளங்கும் தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் சீர்மிகு, சிறப்பான, மகத்தான 'அனைவருக்கும் அனைத்தும்' என்கிற இலக்கை நோக்கி வெற்றி நடைபோடும்

நமது திராவிட மாடல் நல்லாட்சியில் பெரியாரையும் அம்பேத்கரையும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்களாக போற்றும் கழகத் தலைவர் அவர்கள் இன்று (ஏப்ரல் 14ஆம் நாள்) அண்ணல் அம்பேத்கர் பிறந்த நாளை சமத்துவ நாளாக கடந்த 2022 ஆம் ஆண்டு சட்டப்பேரவையில் 110 விதியின் கீழ் அறிவித்து உறுதிமொழி ஏற்க செய்து மக்களின் நலனையே வாழ்நாள் குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்து பொது மக்களின் நெஞ்சங்களில் என்றும் வாழ்ந்து கொண்டிருக்கக் கூடிய தலைவர்களை தி.மு. கழகத்தின் அனைத்து மாவட்ட கழக அலுவலகங்களிலும் நன்றி மறவாமல் போற்றுகின்ற பணியை நாம் எல்லாம் ஆற்றிட வேண்டும் என்று கழகத் தலைவர் அவர்கள் அன்பு கட்டளையிட்டு இருக்கிறார்.



கழகத் தலைவரின் அன்புக் கட்டளையை ஏற்று சென்னை தெற்கு மாவட்ட கழகத்தின் சார்பில் இன்று (14.4.2025) காலை சரியாக 8 மணியளவில் சைதை பஜார் சாலையில் அமைந்துள்ள சென்னை தெற்கு மாவட்ட கழக அலுவலகத்தில் அம்பேத்கர் படத்திற்கு மாலை அணிவித்து உறுதிமொழி ஏற்கின்ற நிகழ்வில் சென்னை தெற்கு மாவட்டத் திற்குட்பட்ட நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி மற்றும் ஒன்றிய செயலாளர்கள், பகுதிக் கழக நிர்வாகிகள், மாவட்டப் பிரதிநிகள், உள்ளிட்ட அனைத்து அணிகளின் மாவட்ட, அமைப்பாளர்கள், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் அனைவரும் பெருமளவில் பங்கேற்குமாறு வேண்டுகிறேன்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் அமைச்சர் மா. சுப்பிரமணியன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

---

### சிவகங்கை மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை சார்பில்

## காரைக்குடியில் தண்ணீர் பந்தல்: அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் திறந்து வைக்கிறார்!

### மு. தென்னவன் – சே.முத்துத்துரை – நா.குணசேகரன் பங்கேற்பு

சிவகங்கை, ஏப். 14 -

சிவகங்கை மாவட்டம் கலை இலக்கிய பகுத்தறிவு பாசறை சார்பில் மோர்தண்ணீர் பந்தல் திறப்பு விழா இன்று (14-04-2025 திங்கள்கிழமை) காலை 10 மணியளவில் காரைக்குடி டி.டி. நகர் பிள்ளையார்கோவில் அருகில் நடைபெறுகிறது.

முன்னாள் அமைச்சர் இலக்கியச் சூரியன் நற்றமிழ் நாவலர் மு.தென்னவன் தலைமை வகிக்க, மாநகர மேயர் சே.முத்துத்துரை மாநகர துணை மேயர் மாநகர செயலாளர் நா.குணசேகரன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

தொடர் நீர்மோர் தண்ணீர் பந்தலை திறந்து வைத்தும் வாழ்த்துரை வழங்கவும் கூட்டுறவுத்துறை அமைச்சர் மாவட்டக் கழகச் செயலாளர் கே.ஆர்.பெரியகருப்பன் வருகை தருகிறார்.

எனவே இந்நிகழ்வில் மாநகர நிர்வாகிகள் வட்டகழக நிர்வாகிகள் பிரதிநிதிகள் மகளிர் அணியின் மாவட்ட நிர்வாகிகள் நகர மகளிரணி நிர்வாகிகள் மாவட்ட மகளிர் தொண்டரணி நிர்வாகிகள் நகர மகளிர் தொண்டரணி நிர்வாகிகள் மாநகர மாமன்ற உறுப்பினர்கள் சார்பு அணியின் மாவட்ட மாநகர அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பாக முகவர்கள் அவசியம் கலந்து கொள்ளுமாறு சிவகங்கை மாவட்டம் கலை இலக்கிய பகுத்தறிவு பாசறை நிர்வாகிகள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

---

### அமைச்சர் தா.மோ.அன்பரசன் மாலை அணிவிக்கிறார்!

## குன்றத்தூரில் டாக்டர் அம்பேத்கர் சிலைக்கு மரியாதை!

### நகரக் கழகச் செயலாளர் கோ.சத்தியமூர்த்தி வேண்டுகோள்!

காஞ்சிபுரம், ஏப்14-

குன்றத்தூர் நகர கழக செயலாளர் கோ.சத்தியமூர்த்தி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

குன்றத்தூர் நகர தி.மு.க. சார்பில் சட்ட மாமேதை அண்ணல் அம்பேத்கர் அவர்களின் 134 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு இன்று (14.04.25- திங்கள் கிழமை) காலை 7:00 மணியளவில் குன்றத்தூர் பேருந்து நிலையம் அருகில் உள்ள டாக்டர் அண்ணல் அம்பேத்கர் அவர்களின் திருஉருவச் சிலைக்கு காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர் - குறு சிறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் மாலை அணிவித்து மரியாதை செய்ய உள்ளார்.

இந்நிகழ்ச்சியில் கழக முன்னோடிகள், நகர கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள், வார்டு கழகச் செயலாளர்கள், நகர மன்ற உறுப்பினர்கள், நகர கழகத்தின் அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கழக தோழர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு நகரக் கழகச் செயலாளர் கோ.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

---

### எஸ் முரளி – நந்தனம் மதி முன்னிலை! மயிலை

## கிழக்கு - மேற்கு பகுதி சார்பில் அண்ணல் அம்பேத்கர் பிறந்தநாள் விழா!

### மயிலை த.வேலு எம்.எல்.ஏ. பங்கேற்பு!

சென்னை, ஏப்ரல் 14-

தமிழ்நாடு முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்கள் அறிவுருத்தலின்படி தென் மேற்கு மாவட்டம் மயிலை கிழக்கு - மேற்கு பகுதி கழக சார்பில் அண்ணல் அம்பேத்கர் அவர்களின் 135-வது பிறந்தநாளை முன்னிட்டு இன்று 14.04.2025 காலை 10 மணி அளவில் மயிலாப்பூர் சட்டமன்ற அலுவலகத்தில் அண்ணல் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தப்படுகிறது.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட கழக செயலாளர் மயிலை த.வேலு, தலைமையில் பகுதி கழக செயலாளர்கள் எஸ் .முரளி, நந்தனம்மதி எம்.சி. ஆகியோர் முன்னிலையில் மயிலை கிழக்கு - மேற்கு பகுதியை சார்ந்த மாநில மாவட்ட பகுதி நிர்வாகிகள் வட்டக் கழக செயலாளர்கள் மாமன்ற உறுப்பினர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், வட்டக் கழக நிர்வாகிகள், பாக முகவர்கள், அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

---

### 156வது வட்டம் - முகலிவாக்கத்தில்

## அண்ணல் அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை!

### வட்டச் செயலாளர் ஜெ.செல்வேந்திரன் வேண்டுகோள்!

சென்னை, ஏப்.14-

முகலிவாக்கம்-156வது வட்டக் கழகச் செயலாளர் ஜெ.செல்வேந்திரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சட்ட மாமேதை புரட்சியாளர் டாக்டர் அம்பேத்கர் அவர்களின் 135வது பிறந்த நாள் விழா முன்னிட்டு முகலிவாக்கம் அரசமரம் பகுதியில் அமைந்துள்ள டாக்டர் அம்பேத்கர் அவர்களின் திருஉருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி இன்று (14.04.2025 - திங்கட்கிழமை) காலை 8.30 மணியளவில் நடைபெற இருப்பதால் நமது வட்டத்துக்குட்பட்ட பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாவட்ட, பகுதி, வட்ட நிர்வாகிகள், கழகத் தோழர்கள், பாக முகவர்கள், கழக முன்னோடிகள் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

---

### தலைமை சீ.கிருஷ்ணமூர்த்தி! முன்னிலை நந்தனம் கி.மதி எம்.சி.!

## டாக்டர் அம்பேத்கர் பிறந்தநாள்: 121 (அ) வட்ட கழகத்தில் காலை சிற்றுண்டி!

### மயிலை த.வேலு எம்.எல்.ஏ. வழங்குகிறார்!

சென்னை,ஏப்.14-

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கிய, பிஆர் அம்பேத்கர் 134வது பிறந்த தினத்தை முனனிட்டு, சென்னை தென் மேற்கு மாவட்டம், மயிலை மேற்கு பகுதி, 121 அ வட்ட திமு கழகத்தின் சார்பில், இன்று (14.04.25 திங்கள்கிழமை) லாயிட்ஸ் சாலை 121 அ வட்ட கழக அலுவகத்திலும், துலுக்கான தோட்டத்திலும்

வட்ட செயலாளர் சீ.கிருஷ்ணமூர்த்தி தலைமையில், மயிலை மேற்கு பகுதி செயலாளர் மற்றும் 121வது வார்டு மாமன்ற உறுப்பினர் நந்தனம் கி மதி எம்.சி., முன்னிலையில், மாவட்ட செயலாளர் மற்றும் மயிலாப்பூர் சட்ட மன்ற உறுப்பினர் மயிலை த வேலு எம்.எல்.ஏ. பொதுமக்களுக்கு காலை சிற்றுண்டி வழங்குகிறார்.

121 அ வட்ட திமு கழகத்தின் சார்பில், ஏற்பாடு செய்து இருக்கும் இந்நிகழ்ச்சியில், மயிலை மேற்கு பகுதி கழக நிர்வாகிகள், 121 அ வட்ட கழகத்திற்கு உட்பட்ட மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், BLA2 / BLC நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள், கழக உடன்பிறப்புகள் மற்றும் பொது மக்கள் திரளாக பங்கேற்கின்றனர்.

---

### கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# அன்னம் தரும் அமுதக்கரம் 53வது நாள்!

சென்னை, ஏப். 14 -

சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு, வெவ்வேறு இடங்களில் அன்னம் தரும் அமுதகரங்கள் சிறப்புமிகு திட்டத்தின் 53வது நாள் அம்பத்தூர் கிழக்கு பகுதி இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழிகாட்டுதல்படி, ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, பி.கே.மூர்த்தி.எம்.சி, எம்.டி .ஆர். நாகராஜ், டி.எஸ்.பி.ராஜகோபால் எம்.சி ஆகியோர் உணவு வழங்கினர்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 53 ஆம் நாளான கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு நேற்று (13.4.2025) அம்பத்தூர் கிழக்கு பகுதி: இடம்: 1) 82வது வட்டம், அன்னை வயலட் காலேஜ் அருகில், மேனாம்பேடு, 20B பஸ் ஸ்டாப், சென்னை. 2)83 ஆ வட்டம், மாதனாங்குப்பம், கலக்டர் நகர், சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு அவர்கள் வழிகாட்டுதல்படி, ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, பி.கே.மூர்த்தி.எம்.சி, எம்.டி.ஆர்.நாகராஜ், டி.எஸ்.பி.ராஜகோபால் எம்.சி ஆகியோர் "தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!" என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் டாக்டர்.ஜி சாந்தகுமாரி எம்.சி, எல்.பி. எஃப். மோகன், டாக்டர் பூர்ணிமா எம்.சி, நீலகண்டன் எம்.சி து.ஆயிரம், ஜி.வி.நாகவள்ளி எம்.சி, கு. கிருஷ்ணமூர்த்தி வட்ட கழக செயலாளர்கள்: மு.சண்மு கம், ஆ.சுந்தரராஜ், லோகநாதன், சு.மோகன்குமார், மு.வி ஜயகுமார், த.வ.லால் பி.செந்தில். வி.ரவிந்திரன், பு.வீரா(எ) வீரராகவன், வெ.ராதா கிருஷ்ணன், த.கண்ணபிரான், எம். கமல் எம்.சி, டி.பிரகாஷ் தயாளன், சி.சீனிவாசன், எம்.ஈ. சேகர் எம்.சி, நா.நெப்போலியன், ஆர்.டீக்கா, ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ்.முரளி, பெரம்பூர் ஆர். ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜய குமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப் குமார் மற்றும் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

---

### தலைமை: கோ. கண்ணன்! முன்னிலை: எஸ். முரளி! 126வது வட்டத்தில்

## டாக்டர் அம்பேத்கர் பிறந்தநாள்: பொதுமக்களுக்கு உணவு!

### மயிலை த.வேலு எம்.எல்.ஏ. வழங்குகிறார்!

சென்னை,ஏப்.14-

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கிய, டாக்டர் பிஆர் அம்பேத்கர் 134வது பிறந்த தினத்தை முனனிட்டு, சென்னை தென்மேற்கு மாவட்டம், மயிலை கிழக்கு பகுதி, 126வது வட்ட தி.மு. கழகத்தின் சார்பில், இன்று (14.04.25 திங்கள்கிழமை) வன்னியம்பதி எஸ்.சி.பி குடியிருப்பில்

வட்ட செயலாளர் கோ கண்ணன் தலைமையில், மயிலை கிழக்கு பகுதி செயலாளர் எஸ்.முரளி முன்னிலையில், வட்டக் கரக நிர்வாகிகள் வரவேற்பில் மாவட்ட செயலாளர் மயிலாப்பூர் சட்ட மன்ற உறுப்பினர் மயிலை த வேலு பொதுமக்களுக்கு காலை11 மணிக்கு அன்னதானம் வழங்குகிறார்.

126வது வட்ட திமு கழகத்தின் சார்பில், ஏற்பாடு செய்து இருக்கும் இந்நிகழ்ச்சியில், மயிலை கிழக்கு பகுதி கழக நிர்வாகிகள், 126வது வட்ட கழகத்திற்கு உட்பட்டமாநில, மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், மகளீரணியை சார்ந்த நிர்வாகிகள்,அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், BLA2 மற்றும் BLC நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழக உடன்பிறப்புகள் மற்றும் பொதுமக்கள் திரளாக பங்கேற்று சிறப்பிக்க உள்ளனர் என்பதை தெரிவித்து கொள்கிறேன் .

---





# அண்ணல் அம்பேத்கர்

135ஆவது பிறந்த நாள்

# சமத்துவ நாள் விழா

எம்.சி.ராஜா நவீன கல்லூரி மாணவர் விடுதிக் கட்டடம்,

1,000 பழங்குடியினர் வீடுகளைத் திறந்து வைத்து,

49,542 பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா

விழாப் பேருரை

திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

சிறப்புரை

திரு. பிரகாஷ் அம்பேத்கர் அவர்கள்

எம்.சி.ராஜா நவீன கல்லூரி மாணவர் விடுதி, சைதாப்பேட்டை, சென்னை



செ.ம.தொ.இ/361/வரைகலை/2025

நாள் : 14.4.2025, திங்கட்கிழமை

எம்.சி.ராஜா கல்லூரி விடுதி திறப்பு விழா : காலை 10.00 மணி, இடம் : சைதாப்பேட்டை, சென்னை

அண்ணல் அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்தல் : காலை 10.30 மணி, இடம் : அம்பேத்கர் மணிமண்டபம், ராஜா அண்ணாமலைபுரம், சென்னை

சமத்துவ நாள் விழா : காலை 11.00 மணி, இடம் : கலைவாணர் அரங்கம், சென்னை

க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப.,
அரசுச் செயலாளர், ஆதிதிராவிடர் (ம) பழங்குடியினர் நலத்துறை

அனைவரும் வருக !

நா.முருகானந்தம், இ.ஆ.ப.,
தலைமைச் செயலாளர்

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in/

எல்லார்க்கும் எல்லாம் !

வெளியீடு :
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை - 600 009.